**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08012023-6633

Volume: 8

Issue: 1

Month: July

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 08.04.2023

Accepted: 16.06.2023

Published: 01.07.2023

Citation:
Nalini Sundari, A. "A Re-Reading of Pa. Visalam's Novel Mellak Kanwai Mellappazhanganawai." *Shanlax International Journal of Tamil Research,* vol. 8, no. 1, 2023, pp. 105–12.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i1.6633

*Corresponding Author:
nalini.tm@bhc.edu.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A Re-reading of Pa. Visalam's Novel Mellak Kanwai Mellappazhanganawai

**A. Nalini Sundari**
*Assistant Professor, Research Department of Tamil*
*Bishop Heber College, Tiruchirappalli, Tamil Nadu, India*
*http://orcid.org/0009-0006-9163-531X*

**Abstract**

Mellak Kanavai Palanganavai' novel has displayed a strong political field. The novel tries to portray through history that the importance of Marxist politics in Indian political history. It has recorded women's positions in gender politics and the micro-politics seen through it. The novel discusses the social concern, bravery and political involvement of a woman living in an average family from 1935 to 1975. Pa.Visalam has written the heroine as a woman with a heart who strives to speak openly about her political experiences. But, she has said everything in a veiled manner.

**Key Words:** Tamil Novel, Criticism, Pa.Visalam, Mellakkanawaiymellappazhaganawai Novel, Marxicism, Feminicism.

**References**

1. Spacious. Pa. 2007. *Melok Kanavai is a Fairy Tale*. Chennai: Any Indian Publishing House.

# மறு வாசிப்பில் பா. விசாலத்தின் ‘மெல்லக் கனவாய் பழங்கதையாய்’ நாவல்

***முனைவர் ஆ. நளினி சுந்தரி***
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பிஷப் ஹூபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச்சுருக்கம்***
*மெல்லக் கனவாய் பழங்கனவாய் நாவல் வலுவான அரசியல் களத்தைக் காட்சிப்படுத்தியுள்ளது. இந்திய அரசியல் வரலாற்றில் மார்க்சிய அரசியல் முக்கியத்துவம், வாய்ந்த ஒன்று என்பதை வரலாற்றின் வழியாக நாவல் சித்திரிக்க முயலுகிறது. பொதுவுடைமை அரசியலில் பெண் நிலைப்பாடுகளையும் அதனூடே காணப்படும் நுண்ணரசியலையும் பதிவாக்கியுள்ளது. 1935 முதல் 1975 வரை சராசரிக் குடும்பத்தில் வாழ்ந்த ஒரு பெண்ணுக்குள் ஏற்பட்ட சமூக அக்கறை, துணிச்சல், அரசியல் ஈடுபாடு ஆகியவற்றைக் குறித்து நாவல் விவாதிக்கிறது. அரசியல் அனுபவங்கள் எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லி விடத் துடிக்கும் மனம் கொண்டவளாக நாயகியை விசாலம் எழுதியுள்ளார். ஆனால், எல்லாவற்றையும் இலைமறைகாயாகவே சொல்லுயிருக்கிறார்.*

***திறவுச்சொற்கள்:*** *தமிழ்நாவல், திறனாய்வு, பா.விசாலம், மெல்லக்கனவாய் பழங்கனவாய், மார்க்சியம், பெண்ணியம்*

இலக்கியப் பபடைப்பாக்கத்தில் மனித வாழ்வியலை உயிர்த்திடச் செய்திடும் நாவல், மனிதனின் சமூக நடத்தைகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் நுட்பமாக விசாரணைக்குட்படுத்துகிறது. வெறுமனே யதார்த்த வாழ்க்கையில் தொடங்கிடும் நாவலாசிரியரின் தேடல், கதையாடலுக்குப் பின்னர் பொதிந்திருக்கிற இருப்பைப் பதிவாக்கிட முயலுகிறது. ஒப்பீட்டளவில் பெண் படைப்பாளர் எழுதிடும் நாவல்கள், குடும்பச் சூழலுடன் சமூகத்தையும் கேள்விக்குள்ளாக்குகின்றன. நாவலாசிரியை பா.விசாலம் எழுதி, **1994** ஆம் ஆண்டு வெளியான “மெல்லக் கனவாய் பழங்கனவாய்” நாவல், குமரி மாவட்டப் பின்புலத்தில் தன்வரலாற்றுக் கதையாடலாக விரிந்துள்ளது. அன்றைய சமூகத்தில் நிலவிய சாதி, பழக்கவழக்கங்கள், அரசியல், வறுமை ஒழிப்பு, மனித உறவுகள், பெண்நிலை, கல்வி போன்றவற்றைத் தன் அனுபவங்களின் சாரத்துடன் பா.விசாலம் நாவலாகப் படைத்திருக்கிறார்.

விசாலம் நாவலை எழுதுவதுபோல அல்லாமல் தனது வாழ்க்கையை “நனவோடை” உத்தியில் குறிப்புகளாக எழுதியிருக்கும் முறை, வாசிப்பில் ஈர்ப்பதாக உள்ளது. விசாலம் நாவலைப் பற்றிப் பேசும்போது அனுபவங்களினூடாகப் பெற்ற உணர்வுகளின் வெளிப்பாடுதான் எனது நாவல். குடும்பத் தகராறுகள், வறுமை, உறவினர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினைகள், கட்சியில் செயல்பட்டபோது ஏற்பட்ட அனுபவங்கள் அனைத்தும் நடந்த உண்மைகள். இவை கற்பனை விவரிவாக்கத்தோடு நாவலில் சொல்லப்பட்டுள்ளன. என்னுடைய வாழ்க்கையையும் அனுபவத்தையும் தேர்ந்தெடுக்கக் காரணம் மற்றவர்களுடைய அனுபவத்தைவிட சொந்த அனுபவங்களைப்

படைப்பாக மாற்றும்போது அதற்கே உரிய வீச்சோடு வெளிவரும் என்பதால்தான் என்று சொல்கிறார்.

‘மெல்லக் கனவாய் பழங்கதையாய்’ என்ற நாவல் தலைப்பு சொல்லும் பொருள் என்ன? உட்குறிப்பு என்ன? அதன் நேரடிப்பொருள் என்ன? என்று நோக்கும்போது அவலத்தின் குறியீடாக எண்ணத் தோன்றுகிறது. கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளின் ஊடாகக் கதைசொல்லி வெறுமைக்குள் பயணிக் கிறாரா? யோசிக்க வேண்டியுள்ளது. கதையின் தொடக்கத்திலிருந்து கதையைச் சொல்லுகிற சிறுமிக்கு ஏற்படும் இது ஏன்? எதற்கு? எப்படி? என வெளிப்படும் தர்க்க மனம் வாசிப்போருக்கும் ஏற்படுகிறது.

நாவலாசிரியை விசாலம் இளம் பருவத்திலேயே பொதுவுடைமை இயக்கத்தாலும் அதன் போராட்டக் கருத்துக்களாலும் ஈர்க்கப்பட்டார். 1952இல் பொதுவுடைக் கட்சியில் உறுப்பினர் ஆனார். அவர், தொடக்கக் காலத்தில் கட்சியின் அலுவலகப் பணிகளில் ஈடுபட்டுச் சுற்றறிக்கைகள் தயாரித்தல், நகல்கள் எடுத்தல், கூட்ட நடவடிக்கைகளைக் குறிப்பெடுத்தல் போன்ற பணிகளைச் செய்தார்; பின்னர் இயக்கம் நடத்திய போராட்டங்களில் பங்கேற்றார்; புரட்சிகரமான இயக்க அனுபவங்களும், இயல்பான எழுத்தாற்றலும் காரணமாகச் சிறுகதைகள் எழுதத் தொடங்கிய விசாலம் நாளடைவில் நாவல் எழுதினார்; இயக்கத் தோழர் மைக்கேல் ராஜுவைக் காதலித்து 1964 ஆம் ஆண்டு மணம் செய்துகொண்டார்; திருமணத்திற்குப் பிறகும் கணவருடன் சேர்ந்தும் தனியாகவும் இயக்கப்பணிகளில் ஈடுபட்டார்; ‘தலைக்கோல்’ என்ற நாடகக்குழுவின் தலைவராகப் பணியாற்றி, நாடகங்கள் மூலம் மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்திட முயன்றார். இலங்கை, கொழும்பில் நடந்த பெண்கள் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் பிரதிநிதியாகப் பங்கேற்றார். பொதுவுடைமைக் கட்சி இரண்டாகப் பிளவுண்டபோது அதிலிருந்து விலகினார். என்றாலும் கடைசி வரையிலும் பொதுவுடைமை இயக்க ஆதரவாளராகவே இருந்தார்.

மெல்லக் கனவாய் பழங்கதையாய் நாவல் வலுவான அரசியல் களத்தைக் காட்சிப்படுத்தியுள்ளது. இந்திய அரசியல் வரலாற்றில் மார்க்சிய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதை வரலாற்றின் வழியாக நாவல் சித்திரிக்க முயலுகிறது. நாவல், பொதுவுடைமை அரசியலில் பெண் நிலைப்பாடுகளையும் அதனூடே காணப்படும் நுண்ணரசியலையும் பதிவாக்கியுள்ளது. 1935 முதல் 1975 வரை சராசரிக் குடும்பத்தில் வாழ்ந்த ஒரு பெண்ணுக்குள் ஏற்பட்ட சமூக அக்கறை, துணிச்சல், அரசியல் ஈடுபாடு ஆகியவற்றைக் குறித்து நாவல் விவாதிக்கிறது. அரசியல் அனுபவங்கள் எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லிவிடத் துடிக்கும் மனம் கொண்டவளாக நாயகியை விசாலம் எழுதியுள்ளார். ஆனால், எல்லாவற்றையும் இலைமறை காயாகவே சொல்லியிருக்கிறார்.

நாவலின் கதைக்களம் நாகர்கோயில், ஆரல்வாய்மொழி, காயன்குளம், கோட்டாறு, திருவனந்தபுரம், திருவிதாங்கூர், சாலக்குடி, வேப்பமூட்டு, தக்கலை, இடலாக்குடி, பாலக்காடு, திட்டுவிளை போன்ற ஊர்களின் பின்புலத்தில் விரிந்துள்ளது. நாவலில் இடம்பெறும் முக்கியமான சம்பவங்கள், நிகழ்வுகள் 1935 ஆம் ஆண்டு தொடங்கி 1974 வரை நடைபெறுகின்றன. பர்மா பிரிந்தது, அகதிகளின் அவல வாழ்வு, எம்டன் குண்டு வீச்சுக்குப் பயந்து மக்கள் சென்னையை விட்டு வெளியேறியது, பொட்டி ஸ்ரீராமுலு நாயுடு உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்தது, காந்தி சுடப்பட்டு இறந்தது, பெரியார் - மணியம்மை திருமணம், திராவிட இயக்கங்களின் தோற்றம் என வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் நாவலில் பதிவாகியுள்ளன.

1935களில் இந்திய அரசியல் சூழலில், நாடெங்கும் விடுதலைப் போராட்டங்கள் வலுவடைந்துகொண்டிருந்தன. காந்தியச் சிந்தனைகள் பரவலாகியதால் மக்கள் தேசிய உணர்வினால் ஈர்க்கப்பட்டனர். பொதுவுடைமைக் கருத்தியல்கள் பரவலாக்கப்பட்டு வெளிப்படையாக கம்யூனிஸ்ட் அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன. தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறப் போராடின. இன்னொருபுறம் வைதிக சநாதனத்தின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த பெரியாரின் சுயமரியாதை இயக்கம், தமிழர் வாழ்க்கையில் ஆழமாக ஊடுருவியிருந்தது. பிறப்பின் அடிப்படையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆதரவான குரல்கள் ஆழமாக ஒலித்தன. பால் அடிப்படையில் இரண்டாம் நிலையில் ஒடுக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாக முத்துலட்சுமி ரெட்டி போன்றோர் எழுப்பிய கலகக் குரல்கள், முக்கியமானவை. இத்தகையச் சூழலில் விசாலத்தின் எதிர்க்குரல் நாவலின் மூலம் வெளிப்பட்டுள்ளது. அது தனக்குள் தானே வினாக்களை எழுப்பி, விடைகளைத் தேடியலைந்து சமூகத்தை அவதானித்த சிறுமியின் குரலாய் ஒலித்தது.

நாவலின் கதை, சிறுமியின் பார்வையில் இருந்து தொடங்கி பதின்பருவப் பெண் பார்வையில் முடிகிறது. சிறுமி வளர்ந்து பருவப் பெண்ணாகிறாள்; திருமணத்திற்கு தயாராகிறாள். அனைத்து ஞானமும் பெற்றவளான கதைச்சொல்லியின் நான் தான் அவ்வப்போது படர்க்கைத் தன்மைக்கு மாறி, கதைநாயகியின் புலன்கள், செயல்பாடுகள் மூலம் உலகை அறிமுகம் செய்கிறாள். தொடக்கம் முதல் முடிவு வரை நாயகியின் அகமனவோட்டங்களும் கேள்விகளும் தர்க்கங்களும் அவள் மனதின் பேச்சாகின்றன அந்தச் சிறுமிக்கு இரவின் உறக்கத்தில் பள்ளிக்கூடப் பாடங்கள் கனவில் வருகிறது. அம்மா பாவம் செய்து விட்டதாகக் கூறி அவள் மகனாலே கொல்லப்படும் மகனின் செயல், அப்பா சொன்னதைக் கேட்கும் அயோத்தி ராமனை மதிக்கும் மனம், பரசுராமனை வெறுக்கிறது. சிறுமியின் உலகம் இயற்கை, தான் வாழும் குடும்பம், விளையாடும் இடங்கள், சென்று வரும் ஊர்ப் பயணங்கள், வீட்டு விசேஷங்கள், அப்பாவின் அரவணைப்பும் அறிவுரையும், அம்மாவின் கதைகளும் அன்பும், அக்கா அண்ணன்களின் வழிகாட்டல்களும் என விரிகின்றது. சிறுமி கண்ட உலகம் தனித்துவமானது. எதிர்கொண்ட கற்பிதங்களினூடே சூழலை ரசிக்கும் சிறுமிதான் கதையின் நாயகி.

சிறுமியின் உள்ளத்தில் தோன்றும் குழந்தைக்கே உரித்தான கேள்விகளுக்கு விடைதேடும் முயற்சிகளில் சில தோல்வியடைகின்றன. வெவ்வேறு ஊர்களில் வாழ்ந்த அனுபவங்களின் மனப்பதிவுகள், சிறுமியின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. அவள் அணிலை ரசிக்கிறாள், அன்னத்தை ரசிக்கிறாள், நடந்து செல்லும் பாதைகளில் காலுக்கு அடியில் பூத்துக் கிடக்கும் பூக்களையும் ரசிக்கிறாள். எல்லா நிலைகளிலும் தர்க்கத்தை முன்வைத்தவளாய் வளரும் சிறுமியின் உலகம் ஒருவகையில் அவளுடைய வீடுதான்.

அப்பாவை எப்போதும் வியக்கும் சிறுமி, அம்மாவின் உழைப்பைக் கண்டு வியப்படைகிறாள். அவளுடைய உடன்பிறந்தோரால் விளையாட்டிற்கு நிராகரிக்கப்படுவதைக்கூட பொறுக்கமுடியாத மனம் கொண்டவள், அண்ணனின் மரணத்தால் உடைந்துவிடும் பெற்றோரின் நிலை கண்டு தவிக்கிறாள். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட அப்பாவின் உடல்நிலை, உடல் சோர்வுகள் ஒருபுறம் எனில் திடீரென வேலையில் இருந்து அப்பா விலகியதால் வருமானம் இன்றித் தவிக்கும் தடுமாற்றம் இன்னொருபுறம் நெருக்கடியைத் தருகிறது.

அக்காமார்களின் கணவன்கள் தந்த நெருக்கடிகள், அண்ணன்களின் பொறுப்பற்ற செயல்கள் காரணமாக பலவீனப்பட்ட அப்பா மரணமடைந்தார். சிறுமிக்கு அப்பாவின் மரணம் பெரும் அழுத்தத்தைத் தருகிறது. உடன்பிறந்தோரின் அலட்சியமும் செயல்களும் அவர்கள் அம்மாவை நடத்திய முறைகளும் அம்மாவின் கைம்பெண் தோற்றமும் அவளைத் துயரத்திற்குள்ளாக்கியது.

அண்ணனின் உதவியால் அவளுக்குக் கிடைத்த நூல்களும் மார்க்சியக் கருத்துகளும் வளரிளம் பெண்ணின் மனதிற்கு உரமூட்டின. அவள், அம்மாவையும் துணைக்குக் அழைத்துக்கொண்டு உலகை மாற்றிடப் புறப்படும் பெண்ணாகிறாள். தொடர்ந்து எதிர்கொண்ட சம்பவங்களும் பிரச்சினைகளும் அவளைத் துணிச்சல் மிகுந்தவளாக மாற்றுகின்றன. எல்லாவற்றிலும் பக்குவமுடன் செயல்படும் மனம் அவளுக்கு இயல்பிலேயே இருந்திருக்க வேண்டும். இதனால்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் சித்தாந்தங்களை வாசித்துத் தன் வாழ்வை மாற்ற முயலுகிறாள்; கட்சிப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்துகிறாள். கட்சித் தோழர்களின் உதவியால் அம்மாவின் புரிதலுக்கு உட்பட்டு மகிழ்கிறாள். கட்சிக் கூட்டங்களில் பேசுதல், அரசியல் ஈடுபாடு, தோழர் நந்தனின் நட்பு காதலாக மாறுதல், கட்சியின் பிளவுகளால் கட்சியில் இருந்து விலகி ஆதரவு தரும் தொண்டராகி அம்மாவின் சம்மதத்துடன் நந்தனைத் திருமணம் செய்தல் என்பதாகக் கதையாடல் முடிகிறது.

வரலாறுப் பாட வகுப்பில் ஆசிரியர் சொன்ன பரசுராமன் கதை, அம்மாளாத்தாளின் மரணச்சடங்கும் அதைத் தொடர்ந்த பாம்படச் சண்டைகளும், அக்காவின் மகப்பேறு, அக்காக்களின் கணவன்மார்களின் செயல்பாடுகள், அம்மாவின் கைம்பெண் தோற்றம், பெற்றோரின் உறவைக் கொச்சைப்படுத்தும் அக்காள் போன்றவை சிறுமியைப் பெண்ணாக மாற்றுகின்றன. அவள் தாவணி அணிந்து, தன் அழகை யாரும் அறியாமல் ரசிக்கிறாள். அம்மாவின் சலிப்பில்லாத வேலை செய்யும் காட்சிகள், அண்ணனின் நண்பர்கள், அண்ணனின் மார்க்சிய நூல் அறிமுகம், முதன்முதலில் அண்ணனுடன் திரைப்படம் செல்லுதல், முதன்முதலில் அம்மாவை எதிர்த்துப் பேசுதல், அம்மாவின் மனமாற்றம், பொது வுடைமைக் கட்சியில் சேர்தல், புதிய தோழர்களின் நடப்பு வட்டம், மேடைப் பேச்சு, தேர்தலில் போட்டியிடுதல், திவான் ஒழிக ஊர்வலம், நிலப்பிரச்சினையால் அவர்கள் வயல் தேடிச்செல்லும் பொழுதுகள், பாட்டக்காரன் வீடு கண்டுபிடித்தல், தோழர் பாண்டியனின் வீட்டில் உணவருந்துதல், நிலச்சீர்த்திருத்தம் பற்றிப் பேசுதல், மருமக்கத் தாயம் முறையில் சிக்கிய நிகழ்வுகளால் வருந்துதல், வீடிழந்த நிகழ்வு, மாதர் சங்கக் கூட்டம், வாலிபர் சங்கக் கூட்டம், பலவிதமான கட்சித் தொடர்புடைய கூட்டங்கள், நகர சுத்தித் தொழிலாளர்கள் கூட்டம், காங்கிரஸ், தி.மு.க கட்சிகள் பற்றிய செய்திகள், மலையாளம் பேசிப் பழகுதல், நந்தன்மீது காதல், கட்சியிலிருந்து விலகுதல், உறவினர்களுக்கு நந்தனை அறிமுகம் செய்யும்போது ஏற்பட்ட அவமானம், அதனால் ஏற்பட்ட உளவியல் நெருடல்கள், நந்தனுடன் பதிவுத் திருமணம் போன்ற சம்பவங்கள் நாவலின் கதைப்போக்கில் முக்கிய இடம் பெறுகின்றன.

நாவலில் இடம்பெறும் முதன்மைக் கதைமாந்தரான சிறுமி கதையின் தொடக்கம் முதலே தன்மையில் பேசப்படும் மாந்தராக இடம் பெற்றுள்ளாள். அவளுக்குப் பெயர் சுட்டப்படவில்லை. நாயகியின் கணவன் நந்தன். கதையாடலில் எல்லா மாந்தர்களும் உறவின் பெயர்களாலே அழைக்கப்படுகின்றனர். பெயர் சொல்லி அழைக்கப்படவில்லை. கதையாடலின் திருப்புமுனைக்குப் பின்னர்

ஏராளமானவர்கள் இடம் பெறுகின்றனர். தோழர்கள், கட்சித் தலைவர்கள் என வரும் ஆட்கள் ஏராளம். நாவலின் கதைசொல்லலில் உறவின் பெயர்களால் அழைக்கப்படுவதால் குழப்பம் ஏற்படுகிறது.

நாவல் வாசிப்பின் தொடக்கம் சிறுமியின் மனநிலையே வாசகருக்கு ஏற்படுத்துகிறது. சிலசமயம் சிறுமியாகவே மாறிப்போகும் தன்மையும் அதிலிருந்து விலகித் தேர்ந்த வாசிப்பாளனாக மாறுகையில் இவர் எப்போது கதையைத் தொடங்குவார்? என்று எண்ணவும் தோன்றுகிறது.

குடும்பம் தான் உன்னதம், கூட்டுக் குடும்பமான தனது குடும்பம் ஒரு முன்னுதாரணம் என்றும், உடன் பிறந்தோரும் அன்னையும் அன்புக்குக் கட்டுப்பட்டு சுயநலமற்று, மனிதாபிமானத்தோடு தான் இருப்பார்கள் என்றும் நினைக்கும் சிறுமி, பெரியவளாகும் பொழுது அதே கற்பனையில் வாழ்கிறாள். ஆனால், வெறும் பணத்திற்காக, சொத்துக்காக அனைவரும் சண்டையிட்டுக்கொள்வதையும், இருப்பதைப் பறித்துக்கொள்ளவும் தனதாக்கிக்கொள்ளவும், போட்டியிடும் அக்காக்களின் கணவர்களையும் பார்க்கும்பொழுது, வாழ்க்கை, குடும்பம் என அனைத்தின் மீதும் எதிர்க்கேள்வி எழுகின்றது. அண்ணன் அவளுக்குத் தந்த மிகப்பெரிய சீதனம் கம்யூனிச சித்தாந்தம் தான். அவள் அப்பா அவளுக்கு தந்துவிட்டுப் போன சீதனம் அவர் கற்பித்த துணிச்சல் தான். இந்த இரண்டும் இவளுக்குப் புதிய பாதையை ஏற்படுத்த உதவின. மனவுறுதி இழந்த அம்மாதான் இவளைப் புரிந்துகொள்கிறாள். தோழர்களின் உதவியுடன், தங்கள் வயலை விசாரித்துப் பொருள் ஈட்டும் துணிச்சல் இருவருக்கும் வருகிறது. அரசியல் கூட்டங்களுக்கு அவள் செல்வது அன்றையக் காலகட்டத்தில் பெரும் சவால்தான். பொருளியல் வாழ்க்கையில் வெற்றிபெறத் துடிக்கும் மனநிலையிலிருந்து விலகிச் சமுகமே மாற்றம் பெறவேண்டும் எனப் போராடுவது அன்றையச் சூழலில் சராசரிக் குடும்பப் பெண்ணுக்கு ஏற்படுவது அசாத்தியம்.

மருமக்கதாயம் எனப்படும் தாய் வழி வாரிசுரிமை 19, 20ஆம் நூற்றாண்டுகளில் கேரள மாநிலத்தில் நாயர் சமுதாயத்தினர் கடைப்பிடித்து வந்த முறையாகும். இம்முறைப்படி ஓர் ஆணின் சொத்துக்கு அவனுடைய சகோதரியின் குழந்தைகளே வாரிசுகளாகக் கருதப்பட்டனர். நாவலில் குடும்பம் மருமக்கதாயத்தால் அப்பாவின் சொத்துக்களை இழந்துள்ளது விவரிக்கப்பட்டுள்ளது. இந்த முறை சட்டத்தால் நீக்கப்பட்ட போதிலும் நாயகியின் அம்மாவின் அம்மா சிறுமி பிறக்கும் முன்னே தலை எண்ணிப் பாகம் பிரித்தல் என்ற முறையில் அம்மாவிடம் இருந்த சொத்தும் பறிபோகும் நிலை வந்தது. பெண்ணுக்குச் சொத்தில் உரிமை, அம்மாவின் சொத்து மகள்களுக்கு என்ற சட்டமும் இல்லாமல் போனது. அம்மாவின் சொத்தை அடைய அவள் பிள்ளைகளே அம்மா உயிருடன் இருக்கும்போதே வக்கீல் நோட்டிஸ் அனுப்பி, தாங்கள் வசமாக்கிக் கொள்ள கணவர்மார்களால் தூண்டப்பட்டனர். பெண்கள் தன்னிலை அறியாது ஆணுக்குச் சாதகமாக, எதிர்த்துப் பேசாமல் அடிபணிந்தனர். குடும்பம், கம்யூனிஸ இயக்கம், ஜனநாயகம், உறவுகள் போன்றன நேர்மையோடும் உண்மையாகவும் இல்லாமல் போகின்றன. பணம், பதவி சார்ந்து வீட்டிலும், நாட்டிலும், அரசியலிலும் மக்கள் சுயநலம் சார்ந்தவர்களாக இருக்கின்றனர் என்பதை நாவல் பதிவு செய்துள்ளது.

விசாலத்தின் மொழி, கலகக்குரல்தான். ஆனால் அது மெல்லிய குரலில் தான் பேசப்படுகிறது. நாவல் இயல்பான மொழி நடையில் சொல்லப்பட்டிருக்கிறது. நேரடியான நடை. நாவலாசிரியர் சொல்லவந்த

விஷயத்தில் எந்தவிதத்திலும் புதிர் இல்லை. நேரடியான விவரணை; விவரிப்பு. சுயஅபிப்பிராயங்கள் வழி நிகழ்த்தப்படும் உரையாடல்கள் என்றாலும் வலிந்து கூறப்படவில்லை. அம்மாவின் மொழி சகிப்புத்தன்மையுடையது, அன்பால் பேசப்படுவது, அக்காமார்களின் மொழி எப்போதும் தேவைக்குரியதை மட்டும் முன்மொழிகிறது. விசாலத்தால் உருவாக்கப்பட்ட நாவலின் மொழி மெல்லிய உணர்வலைகளை ஏற்படுத்தும் மௌன மொழி. ஆண்களைக் குறித்த இவரது மொழி பொதுத் தன்மையுடையதாய் இருக்கிறது.

பெண் எப்போதும் சமுதாயத்தில் இரண்டாம் இடத்தில் இருப்பவளாகவே இருக்கிறாள் என்ற ஆதங்கம் கொண்டுள்ள நாவல் நாயகி, தனது இயக்கத்துத் தோழர் ஒருவரும் கூட, தனிமையில் சந்திக்க நேரும் போது அவரது முரண்பட்ட ஒழுங்கால் அதிர்வடைகிறாள். அங்கும் தான் ஒரு வெறும் பெண்ணுடல் மட்டுமே என்று பார்க்கப்படும்பொழுது அதிர்ச்சி அடைகிறாள்.

கம்யூனிஸ இயக்கத்திலும் முழு மனதோடும், சுயலமற்றும், நேர்மையோடும் தன் கடைமையைச் செய்கிறாள். ஆனால், அப்பெண்ணின் வளர்ச்சி எல்லோராலும் கொண்டாடப்பட இயலாததாகிவிட்டது. தோழர்கள் மத்தியில் மகிழ்ச்சியை மட்டுமே ஏற்படுத்தவில்லை, துயரங்களையும் சேர்த்துதான். எனவேதான், அவள் வசிக்கும் ஊரில் நடைபெறும் கூட்டத்தைக்கூட அப் பெண்ணுக்கு அறிவிக்கப்படாததாக்கி விடுகின்றனர் தோழர்கள். தனது வளர்ச்சி சிலருக்குப் பொறாமையை உண்டாக்கி இருக்கிறதோ என்ற எண்ணம் அப்போது தான் அவளுக்குத் தோன்றுகிறது.

நாவலின் நாயகி, குடும்பம், திருமணம் போன்ற உறவுகளிலிருந்து விலகி முற்றிலுமாக அவற்றை எதிர்த்துப் பேசும் பெண்ணியவாதி அல்ல. மெல்லிய காதலும், குடும்ப எதிர்பார்ப்பும், திருமணப் உறவில் தன்னை இணைத்துக் கொள்ளும் பெண்ணாகத் தான் விவரிக்கப்பட்டுள்ளாள். அன்றாட வாழ்வில் அவளுக்குத் தோன்றும் பின்வரும் கேள்விகள் ஆய்விற்குரியன.

அம்மாளாத்தா ஏன் செத்துப் போனா? இறந்தவர்களைப் புகழ்கிறார்களே? அதற்காகவே சாகலாமோ?

பெரியக்காவின் தாவணி சற்றே விலகினாலே ஆத்தா, "பொம்பளே புள்ளக்கி சேல விலகலாமா?" எனக் கண்டிக்கிறாள். வீட்டு வேலைக்காரப் பெண்கள் ஐம்பருடன் மட்டுமே உலவி வருவது ஏன்? அக்கா மட்டும்தான் பொம்பளயா? அல்லது சேலை விலகுவது அக்காவிற்கு மட்டுமே மாபெரும் குற்றமா?

பர்மா பிரிந்தது ஏன்? சிங்கப்பூரில் என்ன நடக்கிறது? அகதிகளாக இந்தியா வருவோரின் துன்பங்கள் என்ன ? காந்தி சுடப்பட்டது ஏன் ?

அக்கா ஏன் அம்மாவின் தாம்பத்தியத்தைக் கொச்சைப்படுத்துகிறாள்?

சொல்வதொன்றும், செய்வதொன்றுமாய் இருக்கும் எல்லாமே கேள்வியாய் எழுகின்றன. சமகால வாழ்க்கையில் நடைபெறும் அரசியல் நிகழ்வுகளையும், குடும்ப மாறுதல்களையும் காதலையும் இணைத்துச் சிறுமி கேள்விக்குட்படுத்துகிறாள். இவைபோன்ற கேள்விகள் முக்கியமானவை. இந்த எதிர்க் கேள்வி கேட்கும் மனம்தான், பின்னாளில் நாயகியைக் கம்யூனிஸ இயக்கத்தில் இணைய வைக்கிறது. அதே எதிர்க்கேள்வி மனம்தான் இயக்கத்திலுள்ள சுயநலப் போக்கை கண்டு பொங்கவும்

செய்கிறது; சுயநலவாதிகள் மத்தியில் தன்னால் தொடர்ந்து இயங்க முடியாது என்பதை அறிந்து அமைப்பிலிருந்து விலகிப் போகவும் செய்கிறது. "மெல்லக் கனவாய்ப் பழங்கதையாய்" நாவலின் தொடக்கமே அதன் கடைசிப் பகுதிதான்.

நாவலின் துவக்கம் முதல் இறுதி வரை வாசகரோடு பயணிக்கும் மற்றுமொரு பெண் சிறுமியின் அம்மா. அரசியல், இலக்கியம், கட்சி கூட்டங்கள், தேர்தல் பங்கெடுப்புகள், தோழர்களோடு வெளியில் செல்லுதல், வெளியூர் செல்லுதல், முடிந்த நேரத்திற்கு வீடு திரும்புகிறாள். தோழர்கள் நாட்கணக்கில், மாதக்கணக்கில் வீட்டில் தங்குகிறார்கள். கூட்டம் கூட்டமாக வீட்டிற்கு வருகின்றனர்; உரிமை கொண்டாடுகின்றனர். எல்லாவற்றுக்கும் எந்தவிதமான முகச் சுளிப்போ, கேள்விகளோ இல்லாமல், உணவும், சிற்றுண்டியும், தேநீரும் செய்து தருகிறாள் அம்மா. எப்போதும் அன்பு ஒன்றே நிறைந்திருக்கும் அம்மாதான் நாவலின் கணத்தை அதிகரிக்கச் செய்கிறாள். தன் மகள் நேர்மையானவள், சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுபவள் என்ற எண்ணம் கொண்டிருந்தாலும்கூட பெண்ணின் எதிர்காலம் தனக்குப் பிறகு என்ன? என்ற கவலைப்பட மட்டுமே அவளால் முடிந்தது. பெற்ற பிள்ளைகளால் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் அம்மாவிற்கு எதுவுமில்லை என்ற நிலை. அவள் தன்னுடைய பிள்ளைகளால் அனுப்பப்பட்ட நீதிமன்ற நோட்டீஸ் காரணமாகப் படும் வேதனைக்கு அளவில்லை. அவளுக்கு மகள், நந்தனைத் திருமணம் செய்யப்போகிறான் எனத் தெரியும். அவள் மகளுக்கு விடை கொடுத்து அனுப்புகிறாள். அவள் எங்கு செல்கிறாள்? அவளுக்குத் தெரியாது. தனியாகவாப் போற..? எனக் கேட்டதுதான் அவள் பேசின கடைசிப் பேச்சு. அவள் நந்தனைத் திருமணம் செய்தாள். அது அவள் அம்மாவுக்கு தெரியுமோ தெரியாதோ? தெரிவில்லை. அவள் அம்மா தனிமையில் எப்படி இருப்பாளோ? அதுவும் தெரியாது? இவளுக்கு நந்தன் துணை. அவள் அம்மா கேள்வியாகி விட்டாள். நாயகியின் அம்மாவும் ஒரு நாயகிதான்.

'உங்கள் நாவலில் ஒரு நேர்மையின் தொனி தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறது. உங்கள் வாழ்க்கை அனுபவங்கள். எதுவும் போலியல்ல. சத்தியம் சார்ந்தது. நாஞ்சில் நாட்டுக்காரனான நான் சந்தித்தறியாத பல விஷயங்கள் எனக்குப் புலப்பட்டுக் கொண்டிருந்தன. ஒரு பெண்ணின் பார்வையில் இருந்து மட்டுமே பெறமுடிகிற சில நுணுக்கமான விஷயங்கள் உங்கள் நாவலில் எனக்குப் புலப்பட்டன. ஐம்பதாண்டு காலத்துக்கு முந்திய ஒரு நாஞ்சில் நாட்டு அம்மை கொஞ்சம் கொஞ்சமாக பெற்று வந்த மனவிரிவும், வலிவும் ஆச்சரியமூட்டும் விதத்தில் நாவலில் அமைந்துள்ளது" என்று நாஞ்சில்நாடன் எனக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். என்று **2016** இல் பா.விசாலம் தனது நேர்காணலில் சொல்லியிருப்பது, இங்குக் கவனத்திற்குரியது.

"பொய்யாய் மெல்லப் பழங்தையாய்ப் போனதுவே" என்ற பட்டினத்தாரின் பாடலில் இருந்து கடைசிவரியைத் தன் சுயசரிதையின் ஆரம்பத்தில் எழுதியிருந்த பாரதியைப் போல, பா.விசாலமும் "மெல்லக் கனவாய் பழங்கதையாய்" எனும் தலைப்பில் இன்பமும் துன்பமும் கலந்த அனுபவங்களைக் கதைகளாக நாவலின் வழி ஆவணப்படுத்தி இருக்கிறார். அவை கலைந்துபோன கனவாய்க் காற்றில் மிதக்கின்றன.

### மூல நூல்

1. விசாலம், பா. 2007. *மெல்லக் கனவாய் பழங்கதையாய்*. சென்னை: எனி இந்தியன் பதிப்பகம்.